# இராம கோபாலன்

*நிறுவன அமைப்பாளர்*

**இந்து முன்னணி,** தமிழ்நாடு
59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676


15-7-2010

## இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர்
## இராம கோபாலன் அவர்களின் பத்திரிகை அறிக்கை!

## திருவாரூர் தியாகேசப் பெருமானுக்கு அவமானம் நேரக் காரணம் அரசின் அலட்சியமும், இறை நம்பிக்கையற்ற அரசியல்வாதிகளும், தமிழக அறநிலையத்துறையின் மெத்தனமுமே!

ஆலயம் அரசாங்க அலுவலகமாக, அரசியல்வாதிகளின் கொள்ளைக் கூடாரமாக மாறிவிட்டது; இது மாற வேண்டும். மற்ற மதத்தினர் தங்களது மதத்தைப் பற்றிச் சொல்லிக் கொடுக்க, பரப்ப, பாதுகாக்கத் தங்களது வழிபாட்டு இடங்களைத் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்கள். அதுபோல இந்துக்களின் ஆலயம் இந்துக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று இந்து முன்னணி தொடர்ந்து போராடி வருகிறது.

அரசின் கோரப்பிடியில் ஆலயம் எவ்வாறு சீரழிகிறது என்பதற்கு உதாரணம் திருவாரூர்! இதனை நாளை நடைபெற இருக்கும் திருவாரூர் தேரோட்டம் வெட்டவெளிச்சமாக்குகிறது. பங்குனி உத்திர விழாவானது 10 நாட்கள் நடைபெற வேண்டிய விழா. அவ்விழாவில் ஆயில்ய நட்சத்திரத்தில் நடக்கும் தேரோட்டமானதால் ‘ஆழித்தேரோட்டம்’ என்று அழைக்கப்படுகிறது. பல ஆண்டுகளாக ஆயில்ய நட்சத்திரத்தில் நடத்த வேண்டிய தேரோட்டத்தைத் தங்களது சௌகரியத்திற்கு மாற்றி நடத்திக் கொண்டிருந்தார்கள். இவர்களின் அலட்சியம் எல்லைமீறிப் போய் கடந்த ஆண்டு மாதம் தவறியது. இந்த ஆண்டு அந்த விழாவானது 4 மாதகாலத்திற்குத் தள்ளிப் போய் உள்ளது. பங்குனி மாதம் நடைபெற வேண்டிய விழா ஆனி மாதத்திற்கு வந்துள்ளது. கடந்த 4 மாத காலமாக தியாகராஜ சுவாமி தேரோட்டத்திற்காக ஆயிரங்கால் மண்டபத்தில் வீற்றிருக்கிறார்!

இத்தனை காலம் சுவாமியைக் காக்க வைத்ததற்கு அறநிலையத்துறை வெட்கப்பட வேண்டாமா? வேதனைப்பட வேண்டாமா? ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் எப்போது வருகிறது என்றுகூடத் தெரியாமலா அரசு இருக்கிறது. தேரோட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்ய வேண்டிய மாவட்ட ஆட்சித்துறை தூங்கி வழிந்துள்ளது. அது மட்டுமல்ல, மாவட்ட கலெக்டர் விடுமுறையில் அமெரிக்கா சுற்றுப்பயணம் சென்றுவிட்டார் என்பதால் இன்னமும் காலதாமதம் செய்ய முயன்றுள்ளது இந்துக்களை அவமானப்படுத்தும் செயல்!

நாளை (16-7-10) நடக்க இருக்கும் தேரோட்டமானது ஆலயப் பாதுகாப்பு கமிட்டி சென்ற மாதம் விடுத்த கண்டனத்திற்குப் பிறகு முடிவு செய்யப்பட்ட தேதி, அடுத்து வருகிற ஆடி மாதத்தில் அம்பாள் உற்சவமானது நடைபெற வேண்டிய நிர்ப்பந்தத்தினால் அவசர கோலத்தில் ஆலய நிர்வாகம் நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இத்தகைய நெருக்கடியிலும் அறநிலையத்துறை அதிகாரிகளுக்குள்ளும், மாவட்ட நிர்வாகத்தினருக்கும் இடையே தங்களுக்குள் யார் பெரியவன் என்ற போட்டி ஏற்பட்டுள்ளது கண்டனத்திற்குரியது!

நீதிதவறாத மனுநீதிச் சோழனையும், பொற்கை பாண்டியனையும் செம்மொழி மாநாட்டில் உற்சவராக அழைத்து வந்த முதல்வர் அவர்கள் நீதி தவறாது நடுநிலையோடு தனது ஆட்சியைச் செய்ய வேண்டாமா? நீதி தவறி கோவலனுக்கு அநீதி இழைத்த பாண்டிய மன்னனால் மதுரை, கண்ணகியின் சாபத்திற்கு ஆளானதை மறக்கலாமா? தியாகேசப் பெருமானுக்கு இழைக்கப்படும் அநீதியால் ஏற்படும் பாதிப்பு தமிழக மக்களுக்கும், அரசுக்கும் வந்து சேரும் என்பதை மறக்கலாமா?

தமிழக முதல்வர் பிறந்த மாவட்டத்தில் இந்த அலங்கோலம் அரங்கேறியிருக்கிறது, முதல்வர் கண்டும் காணாததுபோல இருக்கிறார்! இதற்குக் காரணம் அரசின் அலட்சியமும், இறை நம்பிக்கை இல்லாத அரசியல்வாதிகளும், மதச்சார்பற்ற அரசும் தான்! அறநிலையத்துறையை அரசு கலைத்துவிட்டு, வக்ஃப் வாரியம் போல் இந்து சமய நம்பிக்கை கொண்ட பெரியோர்கள், இந்து இயக்கத் தலைவர்களைக் கொண்ட தனி வாரியம் அமைக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயம் என்பதை இந்துக்கள் உணர்ந்து ஆலயம் காத்திட தனிவாரியம் அமைத்திட அரசை வலியுறுத்த வேண்டும் என்று இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது.

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**

நிறுவன அமைப்பாளர்

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**